# இலங்கை அரசாட்சி "கெசெற்" பத்திரிகை.

அரசாட்சியாரின் அனுமதிப்படி பிரசுரிக்கப்பட்டது.

இல. 7,987 — 1933 ம் ஹூ ஆனிமீ 16 ந் திகதி, வெள்ளிக்கிழமை.


## Part IV.—நான்காம் பாகம்.

### அரசாட்சியாரின் தேள்வைக்காகிய காணி விளம்பரங்கள்.

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் நீர்கொழும்பு இங்ஜோச் டிவுறவ்வில் பகிரங்கரேட்டு பெருப்பித்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 46. குறிச்சி—கயச்சோடை.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 1 | யாதன்ககவச்த 38 ம் இறைவரி இலக்கத்தின் பகுதி | தென்னங்காணி, 2 தென்னையும், ஒரு வரிசையிலுள்ள 3 வேய்ந்த மண்குடிசையும், ஒரு வேய்ந்த கட்டிடக் குசினியும் ஒரு வேய்ந்த கொட்டிலுமுள்ளது | ஏ. மொகமட் அபூசல்லியும், ஏ. சேனலா அப்தீனும், கயச்சோடை, ஏ. பாத்தும்மாவும், ஏ. கசீமும், குனுப்பிற்றி, நீர்கொழும்பு | 0 0 6·47 |
| 2 | ஷை .. | தோட்டம் (வெறுங்காணி) .. | மேற்படி, துரை கனியும்மாவால் உரித்துப்பேசப்படுவது | 0 0 0·28 |
| 3 | மாதன்ககவத்த 36 ம் இறைவரி இலக்கத்தின் பகுதி | தென்னங்காணி, 4 தென்னையும், ஒரு வரிசையில் 3 வேய்ந்த மண்குடிசையும் | துரை கனியும்மா .. | 0 0 7·48 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ஹூ-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனை செய்திருப்பதனால் அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக்கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர்மூலமாய் 1933 ம் ஹூ ஆவணி மாசம் 25ந் திகதியிலன்று 2 மணிக்கு நீர்கொழும்பு நகரசங்கக் கந்தோரில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடைமைகளினது தன்மையையும் அவ்வுடமைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரிமைகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனால் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

கொழும்புக் கச்சேரி,
1933 ம் ஆண்டு ஆனிமீ 13 ந் தேதி.

ஆர். எஸ். வீ. பொலியர்,
உதவி அரசாட்சி ஏசண்டு.

---

1876 ம் ஹூ-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் தென் மாகாணம் மாத்துறை டிஸ்திறிக் வெல்லபடபத்துவில் உடஅபறக்க கிராமத்தில் பள்ள அபறக்க உடஅபறக்க கிராமசங்க றேட்டிலிருந்து பற்றடோலவுக்கு ஓர் பாதை திறப்பதற்காக என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச்சொல்லப்படும் காணியை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. A 74. குறிச்சி—உடஅபறக்க.

| துண்டு. | காணியினது பெயர். | விவரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. று. ப. |
|---|---|---|---|---|
| 4 | பற்றடலவத்தை .. | 3 வருஷத்திய 3 தென்னைமரங்களுள்ள தோட்டம் | உடஅபறக்கவிலுள்ள டொன் டினஸ் செனவிறற்ன | 0. 0 4·8 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிப்தியவர்கள் எனக்குக கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணியை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைகொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ ஜுலை மாசம் 17 ௳ தேதியிலன்று காலை 11 மணிக்கு மாத்துறை கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத தத்தமக்கு அக்காணியிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

மாத்தறைக் கச்சேரி,
1933 ம் ௵ ஜூன்மீ 2 ௳.

எஸ். எச். வரிடியா,
உதவி அரசாட்சி ஏசன்று

---

1876 ம் ௵-த்து 3 ம் இலக்கச் சட்டத்தினது 7 ம் பிரிவின் பிரகாரம் பிதுறுவல்ல றத்மலே கன்சபாவ றோட்டைத் திருத்தல் என்னும் பகிரங்கதேவைக்கு வேண்டியதான பின்னர்ச் சொல்லப்படும் காணிகளை, அஃதாவது:—

பிரதமபடத்து இல. 7,758. குறிச்சி—வடமேல் மாகாணத்தில், குருணக்கல் டிஸ்திறிக்கில், திம்புதெனிஹறபத்துவில், றெக்கொப்பத்து கோறளையிலுள்ள றத்மலெயும், பிதுறுவல்லவும்.

| துண்டு. | காணியினது பெயர் | விபரம். | உரித்தாளியின் பெயர். | விசாலம். ஏ. | றூ. | ப. |
|---|---|---|---|---|---|---|
| 1 | பொத்துபுறன்பிட்டியெ வத்த | தென்னந்தோட்டம் | (1) மாப்பமுதியன்செலாகே கிறிவண்டா, (2) மாப்பமுதியன்செலாகே அப்புகாமி, (3) மாப்பமுதியன்செலாகே கிறிமுதியன்சே | 0 | 0 | 23·8 |
| 2 | பிதுறுவல்லெவத்த .. | வெறும் நிலம் | கொழும்பிலுள்ள ஹவலொக் ரவுனைச்சேர்ந்த இ. கொச் அவர்களின் மனைவியார் | 0 | 0 | 1 |
| 3 | ஷை .. | ஷை .. | ஷை .. .. | 0 | 0 | 0·4 |

எடுத்துக்கொள்வதற்கான எத்தனஞ்செய்யும்படி 1876 ம் ௵-த்துக் காணி எடுத்துக்கொள்வதைப்பற்றிய சட்டத்தினது 6 ம் பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம் தேசாதிபதியவர்கள் எனக்குக் கற்பனைசெய்திருப்பதனுல், அக்காணிகளை ஆட்சி ஒப்புக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறுர் என்பதை 7 ம் பிரிவின்படி வேண்டிய பிரகாரம் நான் இதனைக் கொண்டு பிரசித்தமாய் விளம்பரஞ்செய்கிறேன்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப்பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது அவரவருடைய காரியகாரர் மூலமாய் 1933 ம் ௵ (ஜுலை) ஆடி மாசம் 10 ௳ தேதியிலன்று காலை 10·30 மணிக்கு குருணக்கல் கச்சேரியில் என்முன்பாக வெளிப்பட்டுத் தத்தமக்கு அக்காணிகளிலுள்ள உடந்தைகளினது தன்மையையும் அவ்வுடந்தைகளுக்காய்த் தாம் சாதிக்கும் உரித்துகளின் தொகையையும் விவரங்களையும் சொல்லும்படி இதனுல் அவர்களிடத்திற் கேட்டுக்கொள்ளப்படுகின்றது.

குருணக்கல் கச்சேரி,
1933 ம் ௵ (ஜூன்) ஆனிமீ 9 ௳.

சி. ஹெரிசன் ஜோன்ஸ்,
வடமேல் மாகாண அரசாட்சி ஏசண்டு.

---

## சுப்பிறீங் கோட்டு அறிவித்தல்கள்.

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம்பிரசித்தப்படுத்துவதாவது: கொழும்பு நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங்கோட்டாரால் மற்கு பிரிவின் டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1933 ம் ஆண்டு ஆடி மாதம் 10 ௳ திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
கார்ல் ஈ. ஆண்ட்,
மேல்மாகாண பிஸ்காலுக்காக.

கொழும்பு பிஸ்கால் கந்தோர்,
1933 ம் ௵ ஆனிமீ 9 ௳.

---

இலங்கைத்தீவிற் சங்கைபோந்த சுப்பிறீங் கோட்டாரது கட்டளையின்படி நாம் பிரசித்தப்படுத்துவதாவது: அல்ஸ் டோப் நியாயஸ்தலத்திலே மேற்சொல்லிய சுப்பிறீங் கோட்டாரால் ரத்தினபுரி டிஸ்திறிக்டைச்சேர்ந்த கிறிமினெல் வழக்குவிசாரணை, 1933 ம் ஆண்டு ஜுலை மாதம் 10 ௳ திகதியாகிய திங்கட்கிழமை காலமே 11 மணி தொடங்கி அன்றும் அதற்கடுத்த நாட்களிலும் நடத்தப்படும்.—ஆதலால் அவ்விசாரணையிற் காரியகருமமுள்ளவர்களெல்லோரும் சொல்லப்பட்ட நேரத்திலே சொல்லப்பட்ட இடத்திலே வெளிப்பட்டு அவ்விடத்தினின்றும் உத்தரவின்றி நீங்காதிருக்கக் கடவர்கள்.

இங்ஙனம்,
சீ. ஈ. றில்னி,
பிஸ்காலுக்காக, சப்

பிஸ்கால் கந்தோர், ரத்தினபுரி,
1933 ம் ௵ ஜூன்மீ 12 ௳.

---

## இலங்கை சேவிங் வங்கி.

வங்கியில் பணம் வைத்திருப்பவர்களின் வருஷாந்தக் கூட்டம் இந்த மாதம் 26 ௳ திகதி 4½ மணிக்கு சட்ட நிருபண சபையின் புதிய சாலையில் நடத்தப்படும்.

என்றி. வ. கேமற,
சக்கிறுத்தார்.

இலங்கை சேவிங் வங்கி,
கொழும்பு, 1933 ம் ௵ ஆனிமீ 10 ௳.